2018 ஜனவரி 9]

விமானப் போக்குவரத்து வசதியும் வரவிருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம் மாநகரில் ஒரு வர்த்தக மையம் அமைத்துத் தர ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கோயம்புத்தூரில்* CODISSIA, *மதுரையில்* MADITSSIA, *திருச்சியில்* TANSTIA *போன்ற வர்த்தக நிறுவனங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. அதேபோல், சேலம் மாநகருக்கு உட்பட்ட தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவோர்கள் அனைவரும் இணைந்து வர்த்தக மையம் அமைக்கும் திட்டத்திற்குச் செயற்குறிப்புகள் மற்றும் தேவையான நிதியாதாரங்களுடன் முன்வந்தால்,* TIDCO *மூலமாக அவர்களுடன் இணைந்து, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, இந்த அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

மின்னணு குடும்ப அட்டை

***22637—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்னணு குடும்ப அட்டைகளில் குடும்ப உறுப்பினர்களின் புகைப்படத்தை அச்சிட்டு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜனவரி 9

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம், எங்களை வாழ வைக்கும் தெய்வம், ஏழையெளிய பாமர மக்களுடைய இதயங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கக்கூடிய எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். அதேபோல, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மின்னணு குடும்ப அட்டைகளில் குடும்பத் தலைவரின் புகைப்படம் மட்டுமே அச்சிட்டு வழங்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கும் பணி நிறைவுறும் நிலையில் உள்ளது. குடும்ப அட்டைகளில் அனைத்துக் குடும்ப உறுப்பினர்களின் புகைப்படங்களை அச்சிட்டு வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதற்கண் என்னுடைய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்பிற்குரிய உங்களுக்கும், சபாநாயகர் அவர்களுக்கும், அன்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய இயக்கத்தில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட எங்கள் அன்பிற்குரிய தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், அன்பிற்குரிய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் வணக்கங்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜனவரி 9]

இந்த வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *முதல் நாள் பேசுகிறேன். மின்னணு குடும்ப அட்டை–*smart card *வழங்க வேண்டுமென்று கேட்டிருப்பது ஒரு நீண்டகால கோரிக்கையாகும். 70 சதவிகிதம்தான் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட மின்னணு அட்டைகளிலும் பல குளறுபடிகள் உள்ளன. குடும்ப அட்டை என்பது இந்தத் தேசத்தினுடைய குடியுரிமைச் சான்றிதழ். இந்த அட்டையில் தற்போது குடும்பத் தலைவியினுடைய படம்தான் உள்ளது. குடும்பத் தலைவருடைய படமும் சேர்த்தால் மிக நன்றாக இருக்கும். அவர்களுடைய வாரிசுகளைச் சேர்த்தால், இதைப் பயன்படுத்த முடியும்.* Smart card*–ஐ ஒரு* identification *ஆக எங்கேயும் காட்டலாம். ஆனால், ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பேசிய அந்த பேச்சுகளெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: ****

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சரி, அதை விடுங்கள். வேறு சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *குடும்பத்தினருடைய படத்தைச் சேர்த்து வைப்பது, மக்களுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். மின்னணு குடும்ப அட்டையின்மூலம் ரேஷன் கடைகளில் எவ்வளவு பொருட்கள் இருக்கின்றன; அதில் எவ்வளவு பொருட்கள்* stock *இருக்கின்றன; எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கின்றன; என்னென்ன* variety*–ஆன பொருட்கள் இருக்கின்றன என்பதெல்லாம் அந்த கார்டை போட்டாலே தெரியும். ஆகவேதான், இந்தக் கார்டை வழங்குவது மிகவும் நல்லது. நிச்சயமாக குடும்பத்தினுடைய அங்கத்தினர்களை-இப்போது குடும்பத் தலைவியைச் சேர்த்திருக்கிறீர்கள். குடும்பத் தலைவருடைய படத்தையும்*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

சேர்த்தால் மிக நன்றாகவும், பயன்படக்கூடியதாகவும் இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து, என்னுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வார்களா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிலேயே தமிழகம்தான் பொது விநியோகத் திட்டத்தில் சிறந்து விளங்குகிறது என்பதற்கு பல்வேறு எடுத்துக்காட்டுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலேதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 330 கோடி ரூபாய் செலவில் smart card வழங்குகிற திட்டத்தினை அறிமுகப்படுத்தி, தமிழகத்தில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வடிவமைத்தார்கள். இந்தியத் திருநாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் smart card வழங்கப்படவில்லை. வேண்டுமென்று சொன்னால், சில மாநிலங்களில் பிளாஸ்டிக் அட்டையிலே குடும்ப அட்டைகள் இருக்கின்றன. Smart card வழங்குகிற முதல் மாநிலம், ஒரே மாநிலம் தமிழ்நாடு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, 70 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன என்று சொன்னார்கள். 99 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றுவிட்டன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் 1–4–2017 அன்று smart card வழங்கும் பணியினைத் துவக்கி வைத்தார்கள். புழக்கத்தில் உள்ள 1 கோடியே 94 இலட்சம் குடும்ப அட்டைகளில் இதுவரை 1 கோடியே 88 இலட்சத்து 36 ஆயிரத்து 907 மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 4 இலட்சத்து 12 ஆயிரத்து 722 குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இன்னும்,

2018 ஜனவரி 9]

2 இலட்சத்து 2 ஆயிரம் smart card*–கள் மட்டும்தான் பிரிண்ட் செய்யாமல் இருக்கின்றன. அதற்குக் காரணம், புகைப்படங்கள் வரப்பெறவில்லை. 2 இலட்சத்து 2 ஆயிரம் குடும்ப அட்டைகளில், சென்னையில் மட்டும் 1 இலட்சத்து 50 ஆயிரம். உறுப்பினருடைய மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 799 குடும்ப அட்டைகள். அதாவது, சென்னைக்கு அடுத்து. இன்னும் புகைப்படம் வரப்பெறாமலும், முகவரி சரியாக வரப்பெறாமலும் இருக்கிற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் ஆகும். இதிலே, இதுவரை மொத்தம் 6 ஆயிரத்து 799 குடும்ப அட்டைகள்தான் வழங்கப்பட வேண்டியிருக்கின்றன. எனவே, தமிழகத்திலே வழங்கப்பட இருக்கிற மொத்த குடும்ப அட்டைகளில் இன்னும் 1 சதவிகிதம்தான்* smart card *வழங்கப்பெறவில்லை. அதற்குண்டான பணிகளும் தொடர்ந்து நடந்து வருகின்றன என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதுமட்டுமல்லாமல், குடும்பத் தலைவர், குடும்பத் தலைவி புகைப்படங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது, தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்திலே நம்மை இணைத்துக்கொள்வதற்காக சில conditions *இருக்கின்றன.*

(*மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை*)

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: Priority Card*–ல் ஒரு பெண்ணின் படம்தான் குடும்பத் தலைவராக இருக்கவேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவின் அடிப்படையில்* priority card*–களில் மட்டும்தான், 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் புகைப்படம் குடும்ப அட்டையில் பொறிக்கப்பட்டுள்ளது. அது இல்லாமல் மற்ற அனைத்துக் குடும்ப அட்டைகளிலும், அந்தக் குடும்பத்தில் விரும்புகிற யாராக இருந்தாலும், ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், குடும்பத் தலைவர் யாராக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்களுடைய புகைப்படம்தான் பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபொழுது ** எல்லாம் குடும்ப அட்டைகளில் வந்துள்ளது என்று சொன்னார்கள். Mobile App–லிருந்து விவரங்களைப் பதிவேற்றம் செய்துகொள்ளலாம் என்கிற ஒரு வாய்ப்பை பொது மக்களுக்குக் கொடுக்கிறோம். திட்டத்தினை எளிதாக்குவதற்காகவும், விரைவில் முடிப்பதற்காகவும் இதுபோன்ற வாய்ப்புகளைக் கொடுக்கிறபொழுது, அவர்கள் தங்களுடைய புகைப்படத்திற்குப் பதிலாக, வேறு யாராவது ஒருவருடைய புகைப்படத்தைப் பதிவேற்றம் செய்தால், அது எங்களுடைய தவறாக இருக்க முடியாது. இதுபோன்ற நிகழ்வுகளுக்குப் பின்னால், வட்ட வழங்கல் அலுவலர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், இவர்களுக்குச் செல்லாமல் நேரடியாகப் பதிவேற்றம் செய்யக் கூடாது என்று உத்தரவிடப்பட்டது. அதற்குப் பின்னால், அந்தப் பிரச்சினையும் தீர்ந்துவிட்டது. எந்தவிதமான குளறுபடியும் இல்லாமல் தமிழகத்திலிருக்கும் அனைவருக்கும் Smart Card வழங்கும் பணி வெகு சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கலுக்கு வழங்கப்படக்கூடிய பொருட்களும்கூட சரியாகச் சென்று சேரவில்லை; 70 விழுக்காடுதான் சென்றிருக்கிறது. தங்களின் முயற்சிக்கு நான் நன்றி சொல்கிறேன். Smart Card–ல் பல colour–கள் இருக்கின்றன. NPHH – வருமானம் அதிகமாக உள்ள பணக்காரர்கள், PHH – நடுத்தர வருவாய்ப் பிரிவினர், AAY– வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் என்று பிரித்து வைக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் பட்டியலில் சில பணக்காரர்களின் பெயர்கள் இருக்கின்றன. பணக்காரர்கள் list–ல் சில வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் பெயர்கள் இருக்கின்றன. இப்படி சில குளறுபடிகள் இருக்கின்றன. இதைச் சரிசெய்வது சாலச்சிறந்தது. உடனடியாக அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஏனென்றால்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜனவரி 9]

இதைக் கணக்கெடுப்பவர்கள் சரியாக விசாரிப்பதில்லை. ஒரு கிராமத்திற்குச் சென்று, ஒருவருடைய வீட்டில் இருந்துகொண்டே, மற்ற வீடுகளில் உள்ளவர்களின் கணக்குகளை எடுப்பார்கள். ஆகவே, இதைச் சரிசெய்து, யார் எந்த தரத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்து, அனைவருக்கும் பொருட்கள் சரியாகக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பொங்கல் பொருட்கள்கூட சரியாக எல்லோருக்கும் கிடைக்கவில்லை. அனைவருக்கும் உடனடியாகக் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல் பரிசினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 5 ஆம் தேதியே தொடங்கி வைத்துவிட்டார்கள். 5 ஆம் தேதி தொடங்கி, எல்லா நியாய விலைக் கடைகளின்மூலம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. 13 ஆம் தேதி வரையிலும் பொங்கல் பரிசு அனைவருக்கும் வழங்கப்பட இருக்கிறது. அதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஏதாவது பிரச்சினை இருந்தால், எந்தக் கடையில் பிரச்சினை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.* (குறுக்கீடு) *வேட்டி–சேலையும் வழங்கப்பட்டு வருகிறது. வேட்டி–சேலை, பொங்கல் பரிசு இரண்டுமே சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இதுமட்டுமல்லாமல், குடும்ப அட்டை வழங்குவதில் மறுபடியும் மறுபடியும் குளறுபடிகள் இருக்கின்றன என்று தெரிவித்து, சதவிகிதக் கணக்கெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் விவரமாக அரசின் கணக்கைச் சொல்லிவிட்டேன். அந்த அடிப்படையில் 1 சதவிகிதம்தான் வழங்கப்படாமல் இருக்கிறது. அதுவும் விரைவில் வழங்கப்பட்டுவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

மகப்பேறு மருத்துவமனை

***9972—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 57–வது வட்டம், யானைகவுனி பாலச் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

யானைகவுனி பாலச் சாலை பகுதியில் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து மகப்பேறு தாய்மார்களின் தேவையைக் கருத்திற்கொண்டு, வருங்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். தன் வாழ்நாளுக்குப் பிறகு, தான் வாழ்ந்த வீட்டையே இந்த நாட்டிற்கு அர்ப்பணித்திருக்கின்ற தலைவர், தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன் உடற்கூட்டையே இந்த நாட்டு மக்களுக்காக அர்ப்பணித்திருக்கின்ற தலைவர், எங்கள் செயல் தலைவர் அன்பு தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவத்திற்கு அவர்கள் தந்திருக்கின்ற ஒரு சிறப்பு அடிப்படையில், அன்பிற்கினிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று*